**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 570/2016**
**நாள் 26/11/2025 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – முத்து (PW1) | த/பெயர் – சின்னையன் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. விபத்து நடந்தபோது நான் மோட்டார் சைக்கிளில் சென்றேன் என்றால் சரிதான். அதை யார் ஓட்டிச்சென்றார்கள் என்றால் என்னுடைய மாமா வில்லியம்ஸ் என்பவர் ஓட்டிச்சென்றார் நான் பின்னால் அமர்ந்து சென்றேன். எப்படி விபத்து ஏற்பட்டது என்றால் பொன்னேரியில் இருந்து மீஞ்சூர் சென்றுக்கொண்டிருந்தபோது பொன்னகர் என்ற இடத்தில் பக்கவாட்டில் இருந்து வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. அடிப்பட்டவுடன் எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் பொன்னேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன்.

2. எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்பட்டதா என்றால் இல்லை. தலையில் தையல் போடப்பட்டது. காலிலும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எப்போது புகார் கொடுக்கப்பட்டது என்றும் தெரியாது. விபத்து யாருடைய கவனக்குரைவால் ஏற்பட்டது என்றால் பக்கவாட்டில் இருந்து வந்த

இருசக்கர வாகனத்தின் கவனக்குரைவால் ஏற்பட்டது அந்த வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் பிளாட்டினா வாகனம் ஆகும், பதிவு எண் தற்போது ஞாபகம் இல்லை. நான் எந்த இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் ஸ்பிளன்டர் பிளஸ் வாகனத்தில் சென்றேன்.

3. எந்த வாகனத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மனவாளன் மீது தாக்கல் செய்துள்ளேன். நான் தவறான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றும் நான் சென்ற வாகனத்திற்கு எதிரே வந்த ஓட்டுநர் ரவி என்பவர் மீதும் அவருடைய காப்பீட்டு நிறுவனத்தின் மீதும் தான் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு பிள்ளியன் ரைடருக்கான காப்பீட்டு சந்தா செலுத்தப்படவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமாக இருநாட்கள் கழித்து தான் புகார் கொடுக்கபட்டுள்ளது என்றால் அதை பற்றி தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதனால், 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்கவேண்டிய அவசியம்இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எதிராக வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**